# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 212/ந/2018
நாள் : 21/06/2019

திரு M. செந்தமிழ் செல்வன்,
காயல் பட்டணம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
காயல் பட்டணம் நகராட்சி,
காயல் பட்டணம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், காயல் பட்டணம், அருணாச்சலபுரம், எண்.80–A என்ற முகவரியில் வசிக்கும் திரு M. செந்தமிழ் செல்வன் அவர்களின் 08.10.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 212/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலங்கள் ஆகியன பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல் பட்டணம், அருணாச்சலபுரம், எண்.80–A என்ற முகவரியில் வசிக்கும் திரு M. செந்தமிழ் செல்வன் என்பவர், காயல் பட்டணம் நகராட்சிக்குட்பட்ட தென்பாக கிராமம் புல எண்.278/1பி–இல் அமைக்கப்படவுள்ள குப்பைக் கிடங்கு / பயோ காஸ் திட்டப்பணி நிலத்திற்குச் செல்ல 1.164 கி.மீ நீளத்திற்கு புல எண்கள்.282 முதல் 285 மற்றும் புல எண்கள் 307 முதல் 310 முடிய உள்ள தனியார் நிலங்களில் சாலை அமைத்து பொதுமக்களின் வரிப்பணத்தை முறைகேடாகப் பயன்படுத்திய நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். காயல்பட்டணம் நகராட்சிப் பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்காக குடியிருப்புப் பகுதியிலிருந்து சுமார் 1400 மீட்டர் தொலைவில் கடையக்குடி பகுதியில் நில அளவை எண்.278–இல் CRZ பகுதியினைத் தவிர்த்து சுமார் 4 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து நகராட்சிக்குத் தானமாகப் பெறப்பட்டு நில அளவை எண்.278/1பி என உட்பிரிவு செய்யப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட நிலத்தில் அமையப்படவுள்ள குப்பைக் கிடங்கு மற்றும் உயிரி எரி வாயு நிலையம் அமைக்கும் திட்டத்தினை செயல்படுத்தவிடாமல் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை மற்றும் பசுமைத் தீர்ப்பாயம் ஆகியவற்றில் மனுதாரர் வழக்கு தொடுக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார் என்று ஆணையர் தெரிவித்துள்ளார். உரக்கிடங்கிற்கு செல்லும் அணுகு சாலை அமைக்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் உட்பட வருவாய் அதிகாரிகளால் கள ஆய்வு செய்து, மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள நில அளவை எண்களின் வழியாக வண்டிப்பாதை செல்வதாகவும், அதன் வழியாக சாலை அமைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளலாம் என அறிவுறுத்திய பின்பே, அவ்வண்டிப்பாதை சீரமைக்கப்பட்டதென்று தெரிவித்துள்ளார். மேலும், 2017–2018–ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.322.46 லட்சம் அனுமதிக்கப்பட்டு, அணுகு சாலை உட்பட சில அடிப்படை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், உரக்கிடங்கு அமையவிடக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே மாங்குரோவ் காடுகள் பாதுகாப்பு கமிட்டியின் செயலாளர் என்ற பெயரில் தவறான தகவல்களை அளித்து திட்டப்பணிகளை முடக்க முயற்சி மேற்கொண்டுள்ளார் என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. உரக்கிடங்கிற்கு செல்லும் சாலை அமைக்கப்பட்டவுடன், அச்சாலையை சுற்றிலும் உள்ள நிலங்கள், மனைப்பிரிவுகளாக மாற்றி அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தனது அச்சத்தை விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், நகராட்சி ஆணையரின் கடிதத்தில், தனியார் நிலங்கள் வழியாக சாலை அமைப்பதற்கு நில உரிமையாளர்களிடம் எழுத்துப்பூர்வமாக அனுமதி பெறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவலில் வாய்மொழியாக மட்டுமே அனுமதி பெறப்பட்டது என்று தெரிவித்து முரண்பட்ட தகவல்களை தெரிவித்துள்ளதாக விசாரணையின் போது தெரிவித்தார். மேலும், சாலை அமைக்கப்பட்ட பகுதி உட்பிரிவு செய்யப்படவும் இல்லை என்றும், அளவும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

4. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சிப்பொறியாளரிடம் 26.02.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்களுள்ள நிலங்களை வருவாய்த் துறை அதிகாரிகள் தல ஆய்வு செய்து சாலை அமைக்கப்பட்டுள்ள நிலப்பகுதி கிராம வரைபடத்தில் சாலை என வகைப்படுத்தப்பட்டுள்ளதென வட்டாட்சியர் தெரிவித்துள்ளார் என விசாரணையின் போது நகராட்சிப்பொறியாளர் குறிப்பிட்டார். மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமைப்பொறியாளர் ஆகியோரிடம் முழு ஒப்புதல் பெற்று, விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பின்பே சாலை சீரமைக்கப்பட்டுள்ளதென்றும், இதில் எந்தவித விதிமீறல்களும் இல்லை என்றும் விசாரணையின் போது நகராட்சிப் பொறியாளர் தெரிவித்தார்.

5. காயல் பட்டணம் நகராட்சி மக்களின் சுகாதார நலன் கருதி குப்பைகள் கொட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு அங்கு உரக்கிடங்கு அமைக்கவும் நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உரக்கிடங்கிற்கு செல்லும் வண்டிப்பாதையினை சீரமைத்து சாலை அமைப்பதற்கும் நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தனியார் நிலங்கள் வழியாக செல்லும் வண்டிப்பாதையினை சாலையாக சீரமைக்க மாவட்ட ஆட்சியர் உட்பட வருவாய் அலுவலர்களின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் சாலை உட்பிரிவு செய்யப்படவில்லை, அகலம் குறிப்பிடப்படவில்லை என்று முறையிட்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் இது குறித்து உரிய அலுவலர்களுக்கு முறையீடு செய்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. இந்நிலையில், இந்நேர்வில், தனியார் நிலங்கள் வழியாக உரக்கிடங்கிற்குச் செல்லும் சீரமைக்கப்பட்ட வண்டிப்பாதையினை உட்பிரிவு செய்து வருவாய் பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 21–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு M. செந்தமிழ்செல்வன்,
80–A, அருணாச்சலபுரம்,
காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
காயல் பட்டணம் நகராட்சி,
காயல்பட்டணம்.
தூத்துக்குடி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்